

# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

## மானியக் கோரிக்கை எண்.34

## அறிவிப்புகள் 2013–14

## 1. நகராட்சிகளில் பேருந்து நிலையங்களை மேம்படுத்துதல்

மூன்றாம் நிலை நகராட்சிகளாக இருந்து தரம் உயர்த்தப்பட்ட நெல்லியாளம் (இரண்டாம் நிலை) மற்றும் திருத்தங்கல் (முதல் நிலை) நகராட்சிகளில் தற்போது பேருந்து நிலையங்கள் இல்லை.

எனவே, பெருகி வரும் மக்கள் தொகை மற்றும் பேருந்துகள் போக்குவரத்து ஆகியவற்றிற்கு ஏற்ப, பொது மக்களின் நலனை கருத்திற்கொண்டு, **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,** நெல்லியாளம் மற்றும் திருத்தங்கல் நகராட்சிகளில், பேருந்து நிறுத்துமிடங்கள், பயணியர் தங்கும் அறைகள், பொருள் பாதுகாப்பு அறை, உணவு விடுதி, கடைகள், குடிநீர் மற்றும் நவீன கழிவறை வசதிகளுடன் புதிய பேருந்து நிலையங்கள் ரூ.6.34 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

இதேபோன்று, குடியாத்தம், திருவத்திபுரம், கள்ளக்குறிச்சி, ஆத்தூர், ராசிபுரம், கரூர், மேட்டுப்பாளையம், பல்லடம், பரமக்குடி, கொமாரபாளையம், திருத்துறைப்பூண்டி ஆகிய நகராட்சிகளில், தற்போது இயங்கி வரும் பேருந்து நிலையங்களில், கூடுதல் பேருந்து நிறுத்துமிடங்கள், பொருள் பாதுகாப்பு அறை, நவீன கழிவறைகள் முதலான உட்கட்டமைப்பு வசதிகள் ரூபாய் 14.72 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

## 2. நகராட்சிகளுக்கு கூடுதல் அலுவலகக் கட்டடம் கட்டுதல்

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் வரி செலுத்துதற்காவும், சான்றிதழ்கள் பெறுவதற்காகவும், வரைபட திட்ட அனுமதி பெறுவதற்காகவும் வருகின்ற பொதுமக்களுக்கு தற்போதுள்ள நகராட்சி அலுவலக கட்டடங்கள் போதுமானதாக இல்லை.

பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப, சேவைகளை விரிவுப்படுத்தி வழங்குவதற்கு கூடுதல் அலுவலக கட்டடங்கள் தேவையானதாக உள்ளது.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,** ஆற்காடு, திருவண்ணாமலை, மேல்விஷாரம், சிதம்பரம், காயல்பட்டினம், ஒட்டன்சத்திரம், மேட்டுப்பாளையம், பவானி, குழித்துறை, உடுமலைப்பேட்டை ஆகிய 10 நகராட்சிகளில், தகவல் மையம், கணிணி மயமாக்கப்பட்ட வரி செலுத்தும் இடம், குடிநீர் வசதி, நவீன கழிவறைகள் முதலான அடிப்படை வசதிகளுடன் கூடுதல் அலுவலகக் கட்டடங்கள் ரூபாய் 14.66 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

## <u>3. தெரு நாய்களுக்கான காப்பகங்கள் கட்டுதல்</u>

பொது மக்களுக்கு அச்சுறுத்தலை எற்படுத்தும் தெரு நாய்களின் பெருக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில், தற்போது சென்னை நீங்கலான மற்ற மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் நாளொன்றுக்கு சராசரியாக 750 தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அறுவை சிகிச்சை பணிகளை தீவிரப்படுத்துவதற்கும், நோயுற்ற நாய்களை பராமரிப்பதற்கும், அறுவை சிகிச்சை கூடங்கள், காப்பகங்கள் மற்றும் நாய் பிடிப்பு வாகனங்கள் தேவையாக உள்ளது.

இதற்கென, **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,** சென்னை நீங்கலான மற்ற மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில், 80 நாய் காப்பகங்கள் கட்டவும், 60 நாய் பிடிப்பு வாகனங்கள் வாங்கவும் ரூபாய் 22 கோடி செலவிடப்படும்.

## <u>4. நகராட்சி நிர்வாக ஆணையரகம் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநரகம் ஆகியவற்றிக்கு புதிய அலுவலகக் கட்டடம் கட்டுதல்</u>

நகராட்சி நிர்வாக ஆணையரகம் 9 மாநகராட்சிகள், 125 நகராட்சிகள் மற்றும் 7 நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகங்கள் முதலானவற்றின் தலைமையகமாக இயங்கி வருகிறது. பேரூராட்சிகளின் இயக்குநரகம் 529 பேரூராட்சிகள் மற்றும் 16 பேரூராட்சியின் உதவி இயக்குநரகங்களின் தலைமையகமாக இயங்கி வருகிறது.

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் அலுவலர்களும், தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகளும் அலுவலக பணி நிமித்தம் வந்து செல்லும் இரு தலைமை அலுவலகங்களும் போதிய இடவசதியின்றி இயங்கி வருகின்றன.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க**, பணியாளர்களுக்கான இடவசதி, அலுவலர்கள் அறை, ஆவண காப்பகம், நூலகம், பெரிய மற்றும் சிறிய அளவிலான கூட்டரங்கு, வாகனங்கள் நிறுத்துமிடம் முதலானவற்றை உள்ளடக்கிய அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய புதிய அலுவலகக் கட்டடம் ரூபாய் 25.00 கோடி மதீப்பிட்டில் கட்டப்படும்.

## 5. சென்னை மாநகரப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மையை மேம்படுத்துதல்

சென்னை மாநகரில் சேகரிக்கப்படும் திடக்கழிவுகளை, அப்புறப்படுத்தி உரமாகவோ எரிசக்தியாகவோ மாற்றி நகரை தூய்மையாக பராமரிக்க **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.** அதன் பேரில் சென்னை மாநகராட்சியின் விரிவாக்க பகுதிகளில் உள்ள உட்புற சாலைகளில் சேகரிக்கப்படும் திடக்கழிவுகளை அன்றாடம் அகற்றுவதற்கு ஏதுவாக 6 கனமீட்டர் கொள்ளளவு கொண்ட இலகு ரக காம்பேக்டர்கள் 50 எண்ணிக்கையிலும், குப்பைகளை சேகரிக்க 1,100 லிட்டர் கொள்ளளவு கொண்ட ‘‘காம்பேக்டர் தொட்டிகள்’’ 750 எண்ணிக்கையிலும், ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

இதன் மூலம் சென்னை மாநகராட்சியின் விரிவாக்க பகுதிகளில் உட்புறச் சாலைகளில் சேருகின்ற சுமார் 500 மெட்ரிக் டன் அளவிலான திடக்கழிவுகள் அன்றாடம் அப்புறப்படுத்தப்பட்டு சாலைகள் தூய்மையாக பராமரிக்கப்படும்.

## 6. குடிநீரின் தரத்தை தொடர்ந்து கண்காணிக்கும் கருவிகள் பொருத்துதல்

பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் குடிநீரின் தரத்தை உறுதி செய்வதற்கு குடிநீர் விநியோக நிலையம், பொதுக் குழாய்கள் மற்றும் வீட்டு இணைப்புகள் ஆகியவற்றில் இருந்து தினமும் 3500 குடிநீர் மாதிரிகள் சென்னைக் குடிநீர் வாரிய பொறியாளர்கள் மற்றும் தர உறுதிப் பிரிவு பணியாளர்கள் மூலம் பரிசோதிக்கப்படுகின்றன.

குடிநீரில் இருக்கும் குளோரின் அளவு, பி.எச். மற்றும் கலங்கல் தன்மை ஆகியவற்றை துல்லியமாகவும் தொடர்ச்சியாகவும் GSM/GPRS – முறைப்படி கண்காணிக்கும் ‘குடிநீர் தொடர் தர கண்காணிப்பு கருவிகளை’, முதற்கட்டமாக சென்னை மாநகரின் 50 இடங்களில் ரூ.1.80 கோடி செலவில் பொருத்த **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.** இக்கருவிகளை பொருத்துவதன் மூலம் வழங்கப்படும் குடிநீரின் தரத்தினை உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்.

## 7. கழிவு நீரகற்றும் நிலையங்களில் தானியங்கி முறை அமல்படுத்துதல்

சென்னை மாநகரின் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் சேகரிக்கப்படும் கழிவுநீர், சென்னை குடிநீர் வாரிய கழிவுநீரகற்று நிலையங்களிலிருந்து சுத்திகரிப்பு நிலையங்களுக்கு கொண்டு செல்ல அமைக்கப்பட்டுள்ள நீரேற்று இயங்திரங்கள் தற்போது மனித சக்தி மூலம் இயக்கப்பட்டு வருகிறது.

கழிவுநீரகற்று இயந்திரங்களின் செயல் திறனை மேம்படுத்தவும், தொலை துாரத்திலிருந்தபடியே இந்த இயந்திரங்களை இயக்கவும் சென்னைக் குடிநீர் வாரியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 218 கழிவுநீரகற்று நிலையங்களில் ரூ.3.60 கோடி செலவில் தானியங்கி முறையை அமைக்க **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

இதன் மூலம் கழிவு நீரகற்று நிலையங்களில் பொருத்தப்படும் நீர்மட்ட அளவுகோல் மற்றும் பிற தானியங்கி எந்திரங்களிலிருந்து பெறப்படும் அளவுகளை கொண்டு தொலை தூரத்தில் இருந்து நீரேற்று இயந்திரங்களை இயக்க இயலும்.

## 8. பேரூராட்சிகளில் நவீன பேருந்து நிலையஙகள் அமைத்தல்

பேரூராட்சிகளில் பேருந்து நிலையஙகளா இலலாததால பொது மக்கள் பெரும் இன்னல்களுக்கு ஆளாகி வருகின்றனர். இதனை போக்கும் வகையில **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** பேருந்து நிலையஙகளா இலலாத பள்ளிப்பட்டு, மணலூர்பேட்டை, கொஙகணாபுரம், சேந்தமஙகலம், எருமபட்டி, முக்கூடல், வெள்ளலூர் ஆகிய 7 பேரூராட்சிகளில் 2013–14ம் ஆண்டிற்கான உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி ஒதுக்கீட்டின் மூலம் ரூ.8.25 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையஙகள் அமைக்கப்படும். இப்பேருந்து நிலையஙகளில் பேருந்து நிறகுமிடம், நடைமேடை அமைத்தல, சிமெண்ட் தளம், பயணிகளா தஙகுமிடம், கழிவறை வசதி, குடிநீர் வசதி மறறும் சுறறுச்சுவர் அமைத்தல போனறஉ நவீன வசதிகள் ஏற்படுத்தப்படும். இதன் மூலம் பேரூராட்சிகளுக்கு கணிசமான அளவில் வருவாய் ஈட்டவும் வழிவகை ஏற்படும்.

## 9. பேரூராட்சிகளில் நவீன எரிவாயு தகனமேடை அமைத்தல்

இயற்கை எய்தியவர்களை திறந்தவெளியில் எரியூட்டுவதால், கார்பன்டையாக்சைடு, கார்பன் மோனாக்சைடு, டயாக்சின் போன்ற வாயுக்கள் வெளியேறி சுற்றுச்சூழல் மாசு ஏற்பட்டு வருகிறது. இதனை தவிர்க்கும் நோக்கத்தில் பேரூராட்சிகளில், **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** நவீன எரிவாயு தகனமேடைகள் படிப்படியாக அமைக்கப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே அண்ணாமலை நகர், தமிழ்நாடு காகித ஆலை புகளூர் ஆகிய பேரூராட்சிகளில் நவீன எரிவாயு தகனமேடை அமைக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் கோயம்புத்தூர் மாவட்டம் ஆலாந்துறை மற்றும் வெள்ளலூர் ஆகிய பேரூராட்சிகளில், உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி ஒதுக்கீட்டின் மூலம் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் நவீன எரிவாயு தகனமேடைகள் அமைக்கப்படும்.

## <u>10. பேரூராட்சிகளுக்கு புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல்</u>

மிகவும் பழமையான, இடவசதி குறைவாக உள்ள பேரூராட்சிகளுக்கு நவீன கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய அலுவலக்கட்டடம் ஏற்படுத்தித் தர **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

பகுதி II திட்டத்தின் கீழ் ரூ.3.68 கோடி மதிப்பீட்டில் கும்மிடிபூண்டி, கம்பைநல்லூர், கோத்தகிரி, எழுமலை, இலஞ்சி ஆகிய 5 பேரூராட்சிகளுக்கும், நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்திற்கும் புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும். இதன் மூலம் பேரூராட்சிகளுக்கு பல்வேறு பணிகளை முன்னிட்டு வருகை தரும் பொதுமக்களுக்கு சிறந்த சேவையை அளிக்க முடியும்.

## 11. திறந்தவெளியில் மனிதக்கழிவு கழிக்கும் நிலையை ஒழித்தல்

நகர்ப்புர உள□ளாட்சி பகுதிகளில□ திறந்தவெளியில் மனிதக் கழிவு கழித்தலை அறவே ஒழித்திட **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள□ உறுதி பூண்டுள்ளார்கள்.** அதன□படி உள□ளாட்சி அமைப்புகளில□ திறந்தவெளியில□ மனிதக் கழிவு கழிக்கும் இடங□களை கண்டறிந்து அவற□றில□ புதிதாக கழிப்பிடங்களை ஏற்படுத்தவும், பழுதான கழிப்பிடங்களை மேம்படுத்திடவும் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில□ ரூ.5.53 கோடி மதிப்பீட்டில□ 127 எண்ணிக்கையில□ சுகாதார வளாகங□கள் கட்டப்பட்டுள□ளன. இதனைத் தொடர்ந்து நடப்பு நிதியாண்டில் 73 பேரூராட்சிகளில் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் 77 ஒருங□கிணைந்த நவீன சுகாதார வளாகங□கள், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங□கியின் கட்டமைப்பு மேம்பாட்டு நிதி மூலம் கட்டப்படும்.

## 12.பேரூராட்சிகளின் நிலைகளை மறு–வகைப்பாடு செய்தல்

ஆண்டு வருவாயின் அடிப்படையில், பேரூராட்சிகளின் நிலையினை மறு–வகைப்பாடு செய்ய **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க** ரூ.200 லட்சத்திற்கும் அதிகமான ஆண்டு வருவாய் உள்ள பேரூராட்சிகள் சிறப்பு நிலை எனவும், ரூ.100 இலட்சம் முதல் ரூ.200 இலட்சம் வரை ஆண்டு வருவாய் உள்ள பேரூராட்சிகள் தேர்வுநிலை எனவும், ரூ.50 இலட்சம் முதல் ரூ.100 இலட்சம் வரை ஆண்டு வருவாய் உள்ள பேரூராட்சிகள் முதல்நிலை எனவும் ரூ.50 இலட்சத்திற்கும் குறைவான ஆண்டு வருவாய் உள்ள பேரூராட்சிகள் இரண்டாம் நிலை பேரூராட்சிகள் எனவும் மறு–வகைப்பாடு செய்யப்படும்.

## <u>13. பேரூராட்சியை நகராட்சியாக தரம் உயர்த்துதல்</u>

சென்னை மாநகரம் மற்றும் தாம்பரம் நகராட்சி பகுதியினை அடுத்துள்ள செம்பாக்கம் பேரூராட்சி துரிதமாக வளர்ந்து வரும் நகர்புரப் பகுதியாகும். இப்பேரூராட்சியில் பல அடுக்குமாடி குடியிருப்புகள், வணிக வளாகங்கள் மற்றும் தொழில் நிறுவனங்கள் அமைந்துள்ளதோடு இப்பகுதி பொருளாதார ரீதியாகவும் வளர்ச்சி பெற்று வருகிறது. 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 47,771 மக்கள் தொகை கொண்டதும், ஆண்டு வருவாய் ரூ.5 கோடியாகவும் உள்ளது.

மக்கள் தொகை வளர்ச்சிக்கேற்ப, தேவையான அடிப்படை கட்டமைப்புகளை உருவாக்குவதும், சேவையின் தரத்தினை மேம்படுத்தி வழங்குவதும் அவசியமாகிறது.

எனவே காஞ்சிபுரம் மாவட்டம், செம்பாக்கம் பேரூராட்சியை நகராட்சியாக தரம் உயர்த்த **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

## 14. 2013–14ஆம் ஆண்டில் கூடுதல் குடிநீர் வழங்கப்படவுள்ள ஊரகக் குடியிருப்புகள்

ஊரகப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டுமென்ற நோக்கத்துடன் 2013–14ஆம் ஆண்டில் முதற்கட்டமாக 6000 ஊரக குடியிருப்புகளில் குடிநீர் திட்டங்களை செயல்படுத்த **மாண்மிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

அதன்படி 4,417 தனி மின்விசைத் திட்டங்கள், 195 குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளுக்கானத் திட்டங்கள் மற்றும் 1,388 குடியிருப்புகளுக்கான கூட்டு குடிநீர் திட்டங்கள் குறைந்தபட்ச தேவை திட்டம் / தேசிய ஊரக குடிநீர் வழங்கல் திட்டம் ஆகியவற்றின் நிதியுதவியுடன் ரூ.1190.72 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

## 15. கூட்டுக் குடிநீர் திட்டங்களில் புனரமைப்புப் பணிகள்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 538 கூட்டுக் குடிநீர் திட்டங்களை பராமரித்து வருகின்றது. இவற்றில் நீண்டகால பயன்பாட்டில் உள்ள கூட்டுக்குடிநீர் திட்டங்களில் பயனாளிகளுக்கு வடிவமைக்கப்பட்ட அளவு குடிநீர் வழங்க இயலாத நிலையை சீர்செய்ய புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

அதன்படி, நீர் ஆதாரங்களை மேம்படுத்துதல், நீருந்து நிலையங்கள் அமைத்தல், தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல், நீண்டகால பயன்பாட்டில் உள்ள மின் மோட்டார் மாற்றும் பணிகள், சேதமடைந்த காற்று தடுக்கிதழ்களை (Air Valves) மாற்றி அமைத்தல், பழுதடைந்த நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு பதிலாக புதிய நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுதல், சாலைகளை அகலப்படுத்தும்போது சேதமடைந்த குழாய்களை மாற்றி அமைக்கும் பணிகள், தனி மின்பகிர்மான பாதை, நீர் அழுத்த பாதுகாப்பு அமைப்பு மற்றும் குடிநீர் அளவு மானி பொருத்துதல் போன்ற புனரமைப்புப் பணிகள், குறைந்தபட்சத் தேவைத் திட்டம் / தேசிய ஊரக குடிநீர்த் திட்டம் ஆகியவற்றின் நிதியுதவியுடன் 233 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் ரூ.58.44 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

## 16. 2013–14ஆம் ஆண்டில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

மாநிலத்தின் கடலோரப் பகுதிகள், குடிநீரின் தரம் பாதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் குடிநீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளுக்காக, நீடித்த நிலைத்த தன்மையுடன் கூடிய ஆறுகள், அணைக்கட்டுகள் மற்றும் நீர்த் தேக்கங்களை நீராதாரமாகக் கொண்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டும் என்பது இந்த அரசின் நோக்கமாகும்.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, 2013–14ஆம் நிதியாண்டில், கடலூர், நீலகிரி, ஈரோடு, திருப்பூர், தேனி, சிவகங்கை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் அமைந்துள்ள பத்மநாபபுரம் நகராட்சி, 14 பேரூராட்சிகள் மற்றும் 3,005 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள 10.66 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 8 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**கே.பி.முனுசாமி,**
நகராட்சி நிர்வாகம் மற்றும்
ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்